# தரம்-08

## அல்லாஹ் அன்புக்குரியவன்

1. இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டின் பிரதான 03 வகைகளும் எவை?
   - தௌஹீத்
   - ரிஸாலத்
   - மஆத்

2. தௌஹீத் என்பதன் பொருள் யாது?
   - தனிமைப்படுத்தல்,ஏகத்துவம்

3. தௌஹீத்தின் எதிர்ப்பதம் யாது?
   - ஷிர்க்

4. இலாஹ் என்றால் என்ன?
   - வணக்கத்திற்குத் தகுதியானவன்

5. ‘‘ரப்’’ என்ற பதத்தை விளக்குக?
   - படைத்து, பரிபாலித்து, போஷிப்பவன்

6. ‘‘நாம் உன்னையே வணங்குகின்றோம்;உன்னிடமே உதவி தேடுகின்றோம்’’ என்பது ஏகத்துவத்தில் எப்பிரிவில் அடங்கும்?
   - தௌஹீத் உலூஹிய்யா

7. ‘‘பொறுமையைக் கொண்டும்................கொண்டும் நீங்கள் அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள்’’?
   - தொழுகை

8. நாம் ஏன் அல்லாஹ்விடமே உதவி தேட வேண்டும்?
   - அல்லாஹ் அன்புக்குரியவன்
   - அவனே உதவி தேடத் தகுதியானவன்

9. ‘‘அல்லாஹ் தன் அன்பை 100 பங்குகளாகப் பிரித்து............பங்குகளை தன்னிடம் வைத்துக் கொண்டான்’’...?(அல்ஹதீஸ்)
   - 99

10. அல்லாஹ்வின் அன்புடன் தொடர்பான சில திருநாமங்கள் சில?
    - அர்-ரஹ்மான்:- அளவற்ற அருளாளன்
    - அர்-ரஹீம்:- நிகரற்ற அன்புடையோன்
    - அர்-ரவூப்:- மிகவும் இரக்கமுடையவன்
    - அல்-வதூத்:- மிகவும் நேசம் கொள்பவன்

11. அல்லாஹ்விடம் உதவி தேடும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய 02 விடயங்களும் எவை?
    - அல்லாஹ்விடம் உதவி தேடும் விடயத்தில் சோர்வடையாதிருத்தல்/ நிராசையடையாதிருத்தல்
    - ஸபப்களை (காரண காரியங்களை)க் கடைபிடித்தல்

12. நாம் அல்லாஹ்விடம் மாத்திரம் உதவி தேடுவதால் கிடைக்கும் நன்மைகள் 03 தருக?
    - அல்லாஹ் பொருத்தமான ஸபப்களின் பக்கம் வழிகாட்டுவான்
    - அல்லாஹ்வின் நெருக்கமும் பொருத்தமும் கிடைக்கின்றன
    - எமது கௌரவம் பாதுகாக்கப்படுகின்றது

## இறுதி வேதம் அல்குர்ஆன்

1. வேதங்கள் பற்றிய நம்பிக்கை ஈமானின் எத்தனையாவது அம்சமாகும்?
    - 3 வது அம்சம்

2. ''கலீபா'' என்பதன் பொருள் யாது?
    - அல்லாஹ்வின் பிரதிநிதி

3. ''ஸுஹுபுகள்'' என்றால் என்ன?
    - ஏடுகள்/அறக்கட்டளைகள்

4. வேதங்கள் நான்கையும் பட்டியற்படுத்துக.
    - தௌராத்
    - ஸபூர்
    - இன்ஜீல்
    - புர்கான்

5. இறுதி வேதம் எது?
    - அல்குர்ஆன்

6. ''அல்குர்ஆன்'' என்பதன் கருத்து யாது?
    - ஓதப்படக்கூடியது

7. ''வஹி'' என்றால் என்ன?
    - இறைசெய்தி/இறைத்தூது

8. அல்குர்ஆன் இறுதி வேதம் என்பதற்கான நியாயங்கள் 03 தருக?
    - அல்குர்ஆன் இறுதி நபிக்கு அருளப்பட்டுள்ளமை
    - அல்குர்ஆனின் தனித்துவமான சிறப்புக்கள்
    - அல்குர்ஆனுக்குப் பின் இன்னொரு வேதம் வந்ததற்கான எந்தவொரு சான்றும் இல்லாமை

9. அல்குர்ஆனின் விஷேட சிறப்புக்களைத் தருக?
    - முழுமையாகப் பாதுகாக்கப்பட்ட வேதம்
    - அனைவருக்கும் பொதுவான வேதம்
    - முழுமையான வழிகாட்டல்
    - அல்குர்ஆன் ஒரு முஃஜிஸா (அற்புதம்)
    - உயிர் வாழும் மொழியில் உள்ளமை
    - அல்குர்ஆனின் கருத்துக்கள் அறிவுபூர்வமானவை

10. அல்குர்ஆனின் பிரதான உள்ளடக்கம் யாது?
    - மறைவான விடயங்கள்

- வணக்க வழிபாடுகள்
- வாழ்க்கைச் சட்டங்கள்
- ஒழுக்க விழுமியங்கள்
- படிப்பினை தரும் வரலாறுகள்

11. அல்குர்ஆனின் ஒழுங்கமைப்பைச் சுருக்கமாகத் தருக?
    - 114 அத்தியாயங்கள் (ஸூராக்கள்)
    - 6666 வசனங்கள் (ஆயத்துக்கள்)
    - 30 ஜுஸ்வுக்கள் (பகுதிகள்)
    - 07 மன்ஸில்கள்
    - ஸூரா பாத்திஹா முதலாவது அத்தியாயம்
    - ஸூரா நாஸ் இறுதி அத்தியாயம்

12. அல்குர்ஆனின் பால் எமக்குள்ள கடமைகள் எவை?
    - அல்குர்ஆனைப் பாதுகாத்தல்
    - ஓதுதல்
    - விளங்கி நடைமுறைப்படுத்தல்
    - அதன்பால் மக்களை அழைத்தல்
    - அதனை எத்தி வைத்தல்

## <u>நபிமார்களும் ரஸூல்மார்களும்</u>

1. ஈமானின் நான்காவது அம்சம் யாது?
   - ➢ ரஸூல்மார்களை நம்புதல்

2. நபிமார்கள் மற்றும் ரஸூல்மார்களின் எண்ணிக்கை யாது?
   - ➢ நபிமார்கள்:-124,000
   - ➢ ரஸூல்மார்கள்:-313

3. அல்குர்ஆனில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபிமார்களின் எண்ணிக்கை யாது?
   - ➢ 25

4. அவர்களில் 10 பேரின் பெயர்களைத் தருக?
   - ➢ முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)
   - ➢ நூஹ் (அலைஹிஸ்ஸலாம்)
   - ➢ இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்)
   - ➢ இஸ்ஹாக் (அலைஹிஸ்ஸலாம்)
   - ➢ இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்)
   - ➢ மூஸா (அலைஹிஸ்ஸலாம்)
   - ➢ ஈஸா (அலைஹிஸ்ஸலாம்)
   - ➢ யூசுப் (அலைஹிஸ்ஸலாம்)
   - ➢ யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்)
   - ➢ சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்)

5. ‘‘உலுல் அஸ்ம்’’ என்றால் என்ன? அவர்கள் யாவர்?
   - ➢ திடவுறுதி பூண்டவர்கள்

- நூஹ் (அலைஹிஸ்ஸலாம்)
- இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்)
- மூஸா (அலைஹிஸ்ஸலாம்)
- ஈஸா (அலைஹிஸ்ஸலாம்)
- முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)

6. இறைவழிகாட்டல்கள் ரஸூல்மார்களை எவ்வகையில் வந்தடைந்தன?
   - வேதங்களாகவும், ஸுஹுபுகளாகவும்

7. வேதமும் ஸுஹுபும் வழங்கப்பட்ட ரஸூலின் பெயரைத் தருக?
   - மூஸா (அலைஹிஸ்ஸலாம்)

8. ஹிப்ரு மொழியில் அருளப்பட்ட வேதம் எது?
   - தௌராத்

9. ஸபூர் வேதம் எம்மொழியில் அருளப்பட்டது?
   - யூனானி/கிரேக்க மொழி

10. புர்கான் வேதத்தின் இன்னொரு பெயர் யாது?
    - அல்குர்ஆன்

11. ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேதத்தின் பெயர் யாது?
    - இன்ஜீல் வேதம்

12. நபிமார்களிடம் காணப்பட்ட உயர்ந்த பண்புகள் சிலவற்றைத் தருக?
    - அன்பு
    - தியாகம்
    - தூய்மை
    - நுண்ணறிவு
    - நீதி
    - நேர்மை
    - ஆமானிதம்
    - ஈகை

13. அற்புதங்கள் என்பதன் அறபுச் சொல் யாது?
    - மு∴ஜிஸாத்

14. <u>ரஸூல்மார்கள்</u> <u>வழங்கப்பட்ட அற்புதங்கள்</u>
    - மூஸா (அலைஹிஸ்ஸலாம்) - கைத்தடி பாம்பாகுதல்
      கை பிரகாசமாதல்
    - தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) - இரும்பை மிருதுவாக்கல்
    - சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) - ஜின்கள் காற்று போன்றவற்றை வசப்படுத்தல்
      ஏனைய உயிரினங்களின் மொழியை விளங்குதல்
    - ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) – மரணித்தவர்களை அல்லாஹ்வின் உதவி கொண்டு உயிர்ப்பித்தல், பிறவிக் குருடன், குஷ்டரோகி போன்றவர்களை சுகப்படுத்தல், வீடுகளில் மறைந்துள்ள பொருட்களைக் கூறுதல்
    - முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) – அல்குர்ஆன்

15. கொலை செய்யப்பட்ட இரு நபிமார்களின் பெயர்களைத் தருக?
    - யஹ்யா (அலைஹிஸ்ஸலாம்)

- ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்)

16. விண்ணுக்கு உயர்த்தப்பட்டு மறுமையின் அடையாளமாக மண்ணுக்கு வரும் நபியின் பெயர் என்ன?
    - ஈஸா (அலைஹிஸ்ஸலாம்)

17. வெள்ளத்ததைக் கொண்டும், காற்றைக் கொண்டும், பேரிடியைக் கொண்டும், கல்மாரியைக் கொண்டும் அழிக்கப்பட்ட சமூகங்களை முறையே குறிப்பிடுக?
    - நூஹ் நபியின் சமூகம்
    - ஆத் சமூகம்
    - ஸமூத் சமூகம்
    - லூத் நபியின் சமூகம்
18. ‘‘காத்தமுன் நபிய்யீன்’’,‘‘ரஹ்மதுன் லில் ஆலமீன்’’ என்பதன் பொருள்களை முறையே தருக?
    - நபிமார்களில் இறுதியானவர்
    - அகிலத்தாரின் அருட்கொடை

## தொழுகையின் பயன்கள்

1. அர்கானுல் இஸ்லாம் என்றால் என்ன? அவை எவை?
    - இஸ்லாத்தின் தூண்கள்
    - கலிமா(ஷஹாதா), தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ்

2. தொழுகை எப்போது கடமையாக்கப்பட்டது?
    - மி∴ராஜின் போது

3. தொழுகையை முறையாக நிறைவேற்றுவதால் ஏற்படும் ஈருலக பயன்களையும் பட்டியற்படுத்துக.
    - மறுமைப் பயன்கள்
        - தொழுகை பாவக் கறைகளை நீக்குகின்றது
        - தொழுகை பிரகாசம் தருகின்றது
        - தொழுகை உயர்ந்த அந்தஸ்தைத் தருகின்றது
        - தொழுகை சுவனத்தின் திறவுகோல்
        - தொழுபவர்களுக்கு மலக்குமார் பிராத்தனை புரிகின்றனர்
        - தொழுகை அளவற்ற நன்மைகளைப் பெற்றுத் தருகின்றது

    - உலகியல் பயன்கள்
        - தொழுகை மோசமான பாவமான விடயங்களை விட்டும் எம்மைத் தடுக்கின்றது
        - தொழுகை ஆரோக்கியம் தருகின்றது
        - தொழுகை மன அமைதி தருகின்றது
        - தொழுகை ஒற்றுமையை ஏற்படுத்துகின்றது
        - தொழுகை நேர முகாமைப் பயிற்சியைத் தருகின்றது

4. கூட்டாகத் தொழுகையை நிறைவேற்றுவதால் கிடைக்கும் பயன்கள் எவை?
    - தலைமைத்துக் கட்டுப்பாடு
    - சமூக, ஒற்றுமை சகோதரத்துவம்
    - சகிப்புத் தன்மை
    - 27 மடங்கு அதிகமான நன்மை
    - சுக, துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பம்

5. தொழுகையின் முக்கியத்துவம் பற்றிய அல்குர்ஆன்,அல்ஹதீஸ் ஆதாரம் ஒவ்வொன்று தருக?
    - ''ஈமான் கொண்ட இறைவிசுவாசிகளே!தொழுகையை நிலைநாட்டுங்கள்.இன்னும் ஸகாத்தையும் கொடுத்து வாருங்கள்''(அல்குர்ஆன்)
    - ''தொழுகை சுவர்க்கத்தின் திறவுகோலாகும்''(அல்ஹதீஸ்)

6. தொழுகையின் பயன் பற்றி ஒரு ஹதீஸை தேடி அறபியில் எழுதுக?
    - ''மன் தரகஸ்ஸலாத பகத் கபர்''
    - ''யார் தொழுகையை (வேண்டுமென்று) விடுகிறாரோ,அவர் இறைநிராகரிப்பாளராகி விடுகிறார்.''

## தொழுகையின் ஓதல்கள்

1. தொழுகை என்றால் என்ன? அதற்கான வரைவிலக்கணத்தைத் தருக?
    - பிராத்தனை
    - நிய்யத்துடன் ஆரம்பித்து குறிப்பிட்ட சில அசைவுகளையும் ஓதல்களையும் உள்ளடக்கி ஸலாத்துடன் நிறைவு பெறும் ஒரு இபாதத் ஆகும்.

2. பர்ளு, ஸுன்னத், முப்திலாத் எனும் பதவிளக்கத்தினைத் தருக?
    - பர்ளு - கட்டாயமானது
    - ஸுன்னத் - கட்டாயமற்றது
    - முப்திலாத் - முறிக்கக் கூடியது

3. தொழுகையின் பர்ளான ஓதல்கள் எத்தனை? அவை எவை?
    - 05

    1) தக்பீர் தஹ்ரீமா (ஆரம்பத் தக்பீர்)
    2) ஒவ்வொரு ரக்அத்திலும் ஸூரா பாத்திஹா ஓதல்
    3) இறுதி அத்தஹிய்யாத் ஓதல்
    4) ஆதனைத் தொடர்ந்து நபியவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லல்
    5) முதலாவது ஸலாம் கூறுதல்

4. தொழுகையின் ஸுன்னத்தான ஓதல்கள் எத்தனை? அவற்றுள் 05 ஐத் தருக?
    - 14

    1) துஆஉல் இஸ்திப்தாஹ் ஓதுதல்
    2) இஸ்திஆதா கூறுதல் (அஊது பில்லாஹி மினஸ் ஷைத்தானிர் ரஜீம்)
    3) பாத்திஹாவின் இறுதியில் 'ஆமீன்' கூறல்
    4) ஸூரா பாத்திஹாவின் பின்னர் ஏதேனும் ஒரு ஸூராவை/வசனத்தை ஓதல்
    5) ஒவ்வொரு நிலைக்குச் செல்லும் போதும் தக்பீர் கூறுதல்

5. ''துஆஉல் இஸ்திப்தாஹ்'' என்றால் என்ன?
    - ஆரம்ப துஆ (வஜ்ஜஹத்து)

6. ''ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதாஹ்'' என்பதன் பொருள் யாது?
    - ''யார் தன்னைப் புகழ்ந்தானோ அவனை அல்லாஹ் செவிமெடுத்து விட்டான்''

7. தொழுகையின் இறுதியில் நான்கு விடயங்களை விட்டும் பாதுகாப்புத் தேடும்படி நபியவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள்.அவை எவை?

- கப்ருடைய வேதனை
- நரக வேதனை
- தஜ்ஜாலுடைய குழப்பம்
- உயிர் வாழுதல் மற்றும் மரணிக்கும் போது ஏற்படும் குழப்பம்

## <u>தொழுகையின் வகைகள்</u>

1. தொழுகையின் பிரதான வகைகளைத் தருக?
   - பர்ளு
   - ஸுன்னத்
2. பர்ளுத் தொழுகையின் வகைகளையும் அவற்றுக்கான உதாரணங்களையும் தருக?
   - பர்ளு ஐன் :- ஐவேளைத் தொழுகை, ஜும்ஆத் தொழுகை, நேர்ச்சைத் தொழுகை
   - பர்ளு கிபாயா :- ஜனாஸாத் தொழுகை

3. ஸுன்னத்தான தொழுகைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

ஸுன்னத்தான தொழுகைகள்

| முஅக்கதா | ஙைரு முஅக்கதா | ராதிபா | ஙைரு ராதிபா |
|---|---|---|---|
| (வலியுறுத்தப்பட்ட ஸுன்னத்) | (வலியுறுத்தப்படாத ஸுன்னத்) | (நாளாந்தம் நிறைவேற்றுவது) | (நாளாந்தம் நிறைவேற்றப்படாதது) |
| *வித்ர் | *தஹிய்யதுல் மஸ்ஜித் | *தஹஜ்ஜுத் | *இரு பெருநாள் தொழுகை (ஸலாத்துல் ஈதைன்) |
| *இரு பெருநாள் தொழுகை | *வுழுச் செய்ததும் தொழும் ஸுன்னத் | *வித்ர் | *இரு கிரகணத் தொழுகை (ஸலாத்துல் குஸுபைன்) |
| *கிரகணத் தொழுகை | | *லுஹா | *மழை வேண்டித் தொழுதல் (ஸலாத்துல் இஸ்திஸ்கா) |
| *பர்ளுத் தொழுகையில் முன்-பின் ஸுன்னத்துக்கள் | | | |

4. தனித்தும் ஜமாஅத்தாகவும் நிறைவேற்றப்பட வேண்டிய தொழுகைகளைப் பட்டியற்படுத்துக.

| <u>தனித்துத் தொழக்கூடியவை</u> | <u>ஜமாஅத்தாகத் தொழக்கூடியவை</u> |
|---|---|
| *ராதிபான ஸுன்னத்துக்கள் | *ஐவேளை பர்ளான தொழுகை |
| *வித்ர் | *ஜும்ஆத் தொழுகை |
| *தஹஜ்ஜுத் தொழுகை | *பெருநாள் தொழுகை |
| *தஹிய்யதுல் மஸ்ஜித் | *கிரகணத் தொழுகை |
| *லுஹா | *தராவீஹ் தொழுகை |
| *ஸலாத்துல் இஸ்திஹாரா | *ஜனாஸாத் தொழுகை |
| *ஸலாத்துல் ஹாஜா | *ரமழான் மாத வித்ர் தொழுகை |
| *வுழுவின் பின் தொழும் ஸுன்னத் தொழுகை | *மழை வேண்டித் தொழும் தொழுகை |

5. கண்டிப்பாக ஜமாஅத்தாக நிறைவேற்றப்பட வேண்டிய தொழுகை ஒன்றைக் குறிப்பிடுக?
   - ஜும்ஆத் தொழுகை

6. ஜமாஅத்தாகவும் தனித்தும் தொழக்கூடிய இரு தொழுகைகளைக் குறிப்பிடுக?
   - ஐவேளை பர்ளான தொழுகை
   - வித்ர் தொழுகை

7. நாளாந்தம் நிறைவேற்றக் கூடிய ஸுன்னத்தான தொழுகைகள் ஐந்தை எழுதுக?
   - தஹஜ்ஜுத் தொழுகை
   - வித்ர் தொழுகை
   - லுஹா தொழுகை
   - தஹிய்யதுல் மஸ்ஜித்
   - பர்ளான தொழுகையில் முன்-பின் ஸுன்னத்துக்கள்

## ஸஜ்தாக்கள்

1. ''ஸஜ்தா'' என்றால் என்ன?
   - சிரம் பணிதல்

2. அடியான் அல்லாஹ்வுக்கு மிக நெருக்கமாகவிருக்கும் சந்தர்ப்பம் எது?
   - சுஜுது

3. சுஜுதின் உறுப்புக்களை வரையறை செய்க?
   - நெற்றி
   - மூக்கு
   - இரு உள்ளங்கைகள்
   - இரு முழங்கால்கள்
   - இருகால் விரல்களின் உட்பகுதி

4. ஸஜ்தாக்களின் வகைகள் எத்தனை? அவை எவை?
   - 03
   - ஸஜ்தா திலாவத்
   - ஸஜ்தா ஷுக்ர்
   - ஸஜ்தா ஸஹ்வு

5. ''ஸஜ்தா திலாவத்'' என்பதை விளக்குக?
   - அல்குர்ஆனில் 15 இடங்களில் ஸஜ்தாவுடைய ஆயத்துக்கள் காணப்படுகின்றன.அதனை ஓதுபவரும் ஓதுவதைச் செவியேற்பவரும் ஸஜ்தா செய்வது ஸுன்னத்தாகும்.இது ''ஸஜ்தா திலாவத்'' எனப்படும்.

6. ''ஸஜ்தா ஷுக்ர்'' என்றால் என்ன? அது நிறைவேற்றப்படும் சந்தர்ப்பத்தைத் தருக?
   - நன்றி பாராட்டும் பொருட்டு செய்யப்படும் ஸஜ்தா
   - ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி/ஆபத்து ஒன்றிலிருந்து பாதுகாப்புப் பெற்றால் செய்யப்படுவது ஸஜ்தா ஷுக்ர் எனப்படும்.

7. ''ஸஜ்தா ஸஹ்வு'' என்றால் என்ன? அது நிறைவேற்றப்படும் சந்தர்ப்பம் 01 தருக?
   - மறதிக்காக செய்யப்படும் ஸுஜுது
   - தொழுகையில் ஏதேனும் ஒரு செயலில் சந்தேகம்/கூட்டல், குறைத்தல் மறதியினால் ஏற்படுமிடத்து செய்யப்படுவது ஸஜ்தா ஸஹ்வாகும்.

## ரமழானில் கடைப்பிடிக்க வேண்டியவை

1. இஸ்லாமிய மாதத்தில் ஒன்பதாவது மாதம் யாது?
   - ரமழான்

2. 1000 மாதங்களை விடச் சிறந்த இரவு எது?
   - லைலதுல் கத்ர் இரவு

3. நோன்பு ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு கடமையாக்கப்பட்டது?
   - ஹிஜ்ரி-02

4. ரமழான் மாதத்தின் சிறப்புக்களைத் தருக?
   - சுவர்க்க வாயில்கள் திறக்கப்படுகின்றன.நரக வாயில்கள் மூடப்படுகின்றன.
   - ஷைத்தான் விலங்கிடப்படுகின்றான்.

5. ரமழானில் கடைபிடிக்குமாறு இஸ்லாம் காட்டித்தந்த நல்லமல்கள் எவை?
   - நோன்பு நோற்றல்
   - இரவுத் தொழுகை
   - அல்குர்ஆன் ஓதுதல்
   - பாவமன்னிப்புக் கோரல்
   - பிராத்தித்தல்
   - தர்மம் செய்தல்
   - இ.்.திகாப் இருத்தல்
   - ஸக்காதுல் பித்ர்

6. ரமழான் மாதத்தின் மூலம் நாங்கள் அடையும் பயன்கள் எவை?
   - இறையச்சத்தை வளர்த்தல்
   - பொறுமையைக் கற்றுத் தருதல்
   - உடலாரோக்கியம் கிடைத்தல்
   - கஷ்டங்களை எதிர்கொள்ளும் மனவலிமையைத் தருதல்
   - ஆன்மீக செயற்பாடுகளில் ஆர்வத்தை ஏற்படுத்தல்
   - பாவங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளும் பக்குவத்தைத் தருதல்

7. ரமரான் மாதத்தில் நாம் தவிர்ந்து கொள்ள வேண்டியவைகளைத் தருக.
   - பொய், வீண் பேச்சு, கேலி, பரிகாசம் செய்தல்
   - புறம் பேசுதல், கோள், படுதூறு, பிறருக்கு துன்பம் விளைவித்தல்
   - சண்டை பிடித்தல்

## ஸக்காத், ஸதகா அறிமுகம்

1. ஸக்காத், ஸதகா என்பதன் கருத்தைத் தருக?
   - ஸக்காத்:- தூய்மை, வளர்ச்சி, அபிவிருத்தி, அருள்
   - ஸதகா:- தர்மம்

2. அல்குர்ஆன் தொழுகையுடன் இணைத்துக் கூறிய இபாதத் யாது?
   - ஸக்காத்

3. ஸக்காத்தை முறையாக நிறைவேற்றும் போது ஏற்படும் நமூக பயன்களைத் தருக
   - செல்வம் பெருகும்
   - அல்லாஹ்வின் பாதுகாப்புக் கிடைக்கும்
   - வறுமை ஒழியும், பஞ்சம் நீங்கும்
   - பொருளாதார ஏற்றத் தாழ்வு குறையும்
   - குற்றச் செயல்கள் குறையும்

4. ஸக்காத், ஸதகாவுக்கு இடையிலான வேறுபாடுகள்

| ஸக்காத் | ஸதகா |
|---|---|
| *பர்ளானது | *ஸுன்னத்தானது |
| *குறிப்பிட்ட சிலரின் மீது கடமையானது | *விரும்பிய எவரும் கொடுக்கலாம் |
| *குறிப்பிட்ட சில பொருட்களின் மீது கடமையானது | *எப்பொருளிலும் கொடுக்கலாம் |
| *எவ்வாறு கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை உண்டு | *விரும்பிய விதத்தில் எவ்வளவும் கொடுக்கலாம் |
| *பொருள்,சொத்து குறிப்பிட்ட அளவை அடைந்திருக்க வேண்டும் | *தன்னிடம் எவ்வளவு இருந்தாலும் வழங்கலாம் |

## துஆக் கேட்போம்

1. ‘‘துஆ’’ என்பதன் கருத்து யாது?
   - வேண்டுதல், அழைத்தல்

2. துஆவின் முக்கியத்துவம் பற்றி ஹதீஸ் 01 தருக?
   - ‘‘வணக்கங்களில் தலையானது பிராத்தனை ஆகும்’’(அல்-ஹதீஸ்)

3. பிராத்திப்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பங்கள் 04 தருக?
   - மழை பொழியும் போது
   - அதானுக்கும் இகாமத்துக்கும் இடையில்
   - நோன்பு திறக்கும் போது
   - பிரயாணத்தின் போது

4. பிராத்திப்பதற்கு மிகப் பொருத்தமான கால நேரங்கள் 04 ஐக் குறிப்பிடுக?
   - பின்னிரவு வேளைகள்
   - வெள்ளிக் கிழமை
   - ரமழான் மாதம்
   - அரபா தினம்

5. பிராத்தனையின் போது கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள்
   - வுழுவுடன் பிராத்தித்தல்
   - கிப்லாவை முன்னோக்கி சப்தத்தைத் தாழ்த்திப் பிராத்தித்தல்
   - துஆவை ஹம்த்,ஸலவாத்துடன் ஆரம்பித்தல்
   - மூன்று முறை கேட்டல்
   - அல்லாஹ்வின் திருநாமங்களைக் கொண்டு பிராத்தித்தல்

6. பிராத்தனைக்கு பதில் அளிக்கப்படும் ஒழுங்குகள் 03 ஐயும் குறிப்பிடுக?
   - கேட்டதை உலகிலேயே கொடுப்பான்

- மறுமையில் கொடுப்பதற்காகத் தாமதப்படுத்துவான்
- கேட்டதற்குச் சமனான ஒரு தீங்கை அவனை விட்டும் நீக்குவான்.

## ஆலிம்களைக் கண்ணியப்படுத்துவோம்

1. ஆலிம்களின் உயர்வு ஹதீஸில் எவ்வாறான உதாரணம் மூலம் விளக்கப்பட்டுள்ளது?
   - ‘‘உங்களில் ஒரு சாதாரண மனிதரை விட எனக்கிருக்கும் உயர்வைப் போல (அறிவின்றி) வணக்கத்தில் ஈடுபடும் ஒருவரை விட அறிவுடையவர் உயர்ந்தவராவார்’’.(திர்மிதி)

2. அறிவைத் தேடிப் புறப்பட்டோர் எப்பாதையில் பயணிக்கின்றனர்?
   - அல்லாஹ்வின் பாதையில்

3. ஆலிம்களுக்காக யார் யாரெல்லாம் பிராத்திக்கின்றனர்?
   - அல்லாஹ்வும் அவனுடைய வானவர்களும், வானம்-பூமி ஆகியவற்றிலுள்ள படைப்பினங்கள் யாவும், புற்றுக்குள் இருக்கும் எறும்பு, கடலிற்குள் இருக்கும் மீன்கள் உட்பட அனைத்தும் பிராத்திக்கின்றன.

4. ஆலிம்களின் சிறப்பைக் கூறும் அல்குர்ஆன் வசனம் ஒன்றும் ஹதீஸ் ஒன்றும் தருக?
   - ‘‘நிச்சயமாக அல்லாஹ்வுடைய அடியார்களில் அவனுக்குப் பயப்படுவதெல்லாம் உலமாக்கள் (கல்விமான்கள்) தாம்’’(35:28)
   - ‘‘கற்பிப்பவரும் கற்றுக் கொண்டிருப்பவரும் நேர்வழியில் இருக்கின்றனர். இந்நிலை இல்லாதவர்களிடம் எந்த நல்ல வழியும் இல்லை’’ (இப்னுமாஜா)

5. ஆலிம்களைக் கண்ணியப்படுத்தும் முறையினைக் குறிப்பிடுக.
   - ஆலிம்கள் பற்றி நல்லெண்ணத்தை வளர்த்தல்
   - அவர்களை கௌரவத்துடன் நோக்கி அறிவுரைகளை செவிமெடுக்க வேண்டும்
   - வீண் விவாதம் செய்ய முற்படக் கூடாது
   - அவர்களின் ஆலோசனைகளைப் பெறல்

## நற்குணம் பேணுவோம்; துர்க்குணம் தவிர்ப்போம்

1. இருவகை குணங்களும் எவை?
   - நற்குணம்
   - துர்க்குணம்

2. நற்குணம் பற்றிய ஒரு நபிமொழியைத் தருக?
   - ‘‘உங்களில் சிறந்தவர் நற்குணத்தால் சிறந்தவர்’’(அல்-ஹதீஸ்)

3. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நற்குணம் பற்றி அல்குர்ஆன் எவ்வாறு வர்ணிக்கின்றது?
   - ‘‘நபியே! நிச்சயமாக நீர் மகத்தான நற்குணமுடையவராகவே இருக்கின்றீர்’’(அல்குர்ஆன்)

4. நீங்கள் விரும்பும் நற்குணங்கள் 05 தருக?
   - இறைபக்தியுடன் வாழ்தல்

- வாக்கை நிறைவேற்றல்
- பணிவோடு நடத்தல்
- நல்லோர் தொடர்புகளைப் பேணி வருதல்
- சமாதானத்தை விரும்புதல்

5. நற்குணத்தால் மறுமையில் கிடைக்கும் பிரதிபலன்கள் யாவை?
   - மறுமை நாளில் ஒரு மு.்.மினின் தராசில் அதிக பாரத்தை ஏற்படுத்துவது நற்குணமே ஆகும்.

6. அடுத்தவரின் உரிமையைப் பறித்தவரின் நிலை யாது?
   - இம்மையிலும் மறுமையிலும் நஷ்டமடைந்தவராகவே காணப்படுவார்
   - கைசேதத்திற்கு உள்ளாகி நரகில் நுழைவார்

7. துர்க்குணம் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தும்?
   - நிம்மதியற்ற, அதிருப்தியான மனோ நிலை
   - பாவச் செயல்கள் மீது நாட்டம்
   - நற்செயல்கள் பற்றிய வெறுப்புணர்வு
   - தீயவர்களுடனான தொடர்பு அதிகரித்தல்

## சிறியோருக்கு அன்பு காட்டுவோம்

1. உரிமைகள் எத்தனை? அவை எவை?
   - 02
   - மனிதன் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய உரிமைகள்,கடமைகள்
   - மனிதன் மனிதனுக்குச் செய்ய வேண்டிய உரிமைகள்,கடமைகள்

2. சிறியோர் மூத்தோரிடமிருந்து எதிர்பார்க்கும் 03 விடயங்களைக் கூறுக?
   - அன்பு
   - பாதுகாப்பு
   - அரவணைப்பு
   - உதவி

3. அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் இரு புதல்வர்களின் பெயர்களைத் தருக?
   - ஹஸன் (ரழியல்லாஹு அன்ஹு)
   - ஹுஸைன் (ரழியல்லாஹு அன்ஹு)

4. ஹஸன் (ரழியல்லாஹு அன்ஹு) இவர்கள் யாருடைய உருவத்திற்கு ஒத்தானவர்களாக இருந்தார்கள்?
   - நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய உருவத்திற்கு

5. அன்பு காட்டப்படாததால் ஏற்படும் பாதிப்புக்கள் 03 தருக?
   - விரக்தி
   - மன உளைச்சல்
   - உற்சாகமின்மை
   - சமூகத்தை விட்டும் தூரமாகுதல்
   - சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுதல்

6. அபூ ஹப்ஸ் (ரழியல்லாஹு அன்ஹு) யாருடைய வீட்டில் வளர்ந்தார்கள்? நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவருக்குக் கூறிய உபதேசம் என்ன?

- நபியவர்களின் வீட்டில்
- "சிறுவனே! அல்லாஹ்வின் பெயர் கூறி சாப்பிடத் தொடங்கு.வலது கரத்தால் சாப்பிடு.உனக்கு அருகில் இருப்பதைச் சாப்பிடு"

7. சிறியோர்கள் மீது நபியவர்கள் அன்பு காட்டிய முறையைக் குறிப்பிடுக?
   - ஸலாம் கூறுதல்
   - அவர்களுக்காகப் பிராத்தித்தல்
   - தமது வாகனத்தில் ஏற்றிச் செல்லல்
   - தலையைத் தடவி விடுதல்
   - உண்ணக் கொடுத்தல்
   - நல்லொழுக்கங்களைப் போதித்தல்

## <u>பிறருக்கு உதவுவோம்</u>

1. சமூகத்தில் நலிவுற்றோரைக் குறிப்பிடுக?
   - அநாதைகள்
   - விதவைகள்
   - மாற்றுத் திறனாளிகள்
   - ஏழைகள்
   - கவனிப்பாரற்றோர்கள்

2. அநாதைகள் சம்பந்தமான அல்குர்ஆன் வசனமொன்றைக் குறிப்பிடுக?
   - "அநாதைகளைக் கடிந்து கொள்ளாதீர்;யாசிப்போனை விரட்டாதீர்"(அல்குர்ஆன்)

3. பெற்றோரை இழந்தோர் அநாதைகள், கணவனை இழந்தோர் விதவைகள், விதவைகளுக்காக உழைப்போர்...............போராடுபவரைப் போன்றவராவார்?
   - இறைவழியில்

4. தான் விரும்பியதை தன்...........விரும்பாத வரை உங்களில் ஒருவர் .............மாட்டார்.
   - சகோதரனுக்கு
   - மு.்.மினாக

5. மறுமையின் தீர்ப்பைப் பொய்யாக்குபவன் யாரென்றால் ............வெருட்டுபவனும் ஏழைகளுக்கு................உணவளிக்காதவனுமாவான்?
   - அநாதைகளை
   - உணவு

6. ......................ஒதுக்கப்பட்டு ...................அழைக்கப்படும் திருமண விருந்து மிகக் கெட்டது.
   - ஏழைகள்
   - வசதிகடைத்தவர்கள் மட்டும்

7. நீங்கள்...............செய்யப்படுவதும்................அளிக்கப் பெறுவதும் பலவீனர்களின் காரணத்தினாலாகும்.
   - உதவி
   - உணவு

## பாவங்களிலிருந்து விலகி வாழ்வோம்

1. பாவங்கள் எத்தனை வகை? அவை எவை?
   - 02 வகை
   - சிறு பாவம்
   - பெரும் பாவம்

2. அந்த 07 பெரும் பாவங்களும் எவை?
   - அல்லாஹ்வுக்கு இணை வைத்தல்
   - சூனியம் செய்தல்
   - கொலை செய்தல்
   - வட்டியை உண்ணல்
   - அநாதைகளின் சொத்துக்களை அபகரித்தல்
   - போரின் போது புறமுதுகுகைக் காட்டி ஓடுதல்
   - கற்புள்ள பெண்கள் மீது அவதூறு சொல்லுதல்

3. பாவச் செயல்களினால் ஏற்படும் பாதிப்புக்கள் 03 தருக?
   - மானுட தர்மம் மீறப்படும்
   - சமூகத்தில் உரிமைகள் மறுக்கப்படும்
   - மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புறும்
   - குழப்பங்கள் அதிகரிக்கும்

4. ஆத்,ஸமூத் கூட்டங்கள் அழிக்கப்பட்டமைக்கான காரணங்கள் எவை?
   - பாவங்களில் மூழ்கியிருந்தமை

5. முஸ்லிம் எவ்விடயத்தில் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டும்?
   - நன்மைக்கும், இறையச்சமுள்ள விடயங்களிற்கும்

6. திருட்டுக் குற்றத்திற்கான தண்டனை யாது?
   - கையை வெட்டுதல்

7. பாவச் செயல்களைத் தடுப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் சிலவற்றைத் தருக?
   - கையால் தடுத்தல்
   - நாவினால் தடுத்தல்
   - முடியாது போனால் மனதால் வெறுத்து ஒதுக்குதல்

## நம்பிக்கை நாணயம் பேணுவோம்

1. நம்பிக்கை நாணயம் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
   - நேர்மை
   - வாய்மை
   - வாக்கு மீறாமை
   - அமானிதங்களைப் பேணல்

2. வாக்குறுதிகளை நிறைவேற்றல் சம்பந்தமான அல்குர்ஆன் வசனமொன்றைத் தருக?

- ‘‘விசுவாசிகளே! நீங்கள் செய்து கொண்ட உடன்படிக்கையை பூரணமாக நிறைவேற்றுங்கள்’’(அல்குர்ஆன்)

3. மோசடி சம்பந்தமான ஒரு ஹதீஸைக் குறிப்பிடுக?
‘‘அறிந்து கொள்ளுங்கள்! ஒவ்வொரு மோசடிக்கும் மறுமையில் ஒவ்வொரு கொடி நாட்டப்படும்’’(அல்-ஹதீஸ்)

## பிரயாண ஒழுங்குகள்

1. பிரயாணம் இபாதத்தாக அமைவதற்கு பின்பற்ற வேண்டிய ஒழுங்குகளில் சிலவற்றைத் தருக?
   - தூய எண்ணம்
   - அல்லாஹ்விடம் உதவி தேடல்
   - தொழுகை நேரங்களைக் கவனத்திற் கொள்ளல்
   - அஜ்னபி-மஹ்ரமி வரையறைகளைப் பேணல்
   - தலைவரைத் தெரிவு செய்தல்
2. பயணத்தின் போது பிறருக்கு இடையூரின்றி நடப்பதற்கான வழிமுறைகள் 03 ஐக் குறிப்பிடுக?
   - சக பயணிகளுக்கு சொல்லால், செயலால், உடல் ரீதியாக, உள ரீதியாக எந்தவொரு இடையூரோ துன்பமோ ஏற்படாதவாறு நடந்து கொள்ள வேண்டும்
   - நலிவுற்றோருக்கு முன்னுரிமை வழங்குதல்
   - இயலாதோருக்கு ஆசனம் வழங்குதல்

## அல்குர்ஆன் ஓதுவதன் சிறப்புக்கள்

- சரி பிழை கூறுக.

1. அல்குர்ஆன் அதனை நம்பியவருக்கு மறுமையில் அல்லாஹ்விடம் பரிந்து பேசும் **(சரி)**
2. அல்குர்ஆனைத் திக்கித் திக்கி சிரமப்பட்டு ஓதுபவருக்குக் கூலி கிடைப்பதில்லை **(பிழை)**
3. அல்குர்ஆனை ஓதுபவர் ஸகீனத்தை (மனஅமைதி) அடைந்து கொள்வார் **(சரி)**
4. அலிப்,லாம்,மீம் என்ற ஓதுவதன் மூலம் ஒருவர் பத்ர் நன்மைகளைப் பெற்றுக் கொள்வார் **(பிழை)**
5. வெள்ளிக் கிழமை தினத்தில் ஸூரா கஹ்பை ஓதுவது நபிவழியாகும்.**(சரி)**

1. அல்குர்ஆனை ஓதுவதன் மூலம் கிடைக்கும் மறுமைப் பயன்கள் 02 குறிப்பிடுக.
   - பரிந்து பேசும்
   - அதிக நன்மைகளைப் பெற்றுத் தரும்

2. அல்குர்ஆனை ஓதுவதன் சிறப்புக்களைக் குறிப்பிடும் 02 ஹதீஸ்களைத் தருக.
   - ‘‘நீங்கள் அல்குர்ஆனை ஓதுங்கள்.ஏனெனில் அதை ஓதியவருக்காக அது மறுமையில் அல்லாஹ்விடம் பரிந்து பேசும்’’
   - ‘‘அல்குர்ஆனைத் திக்கித் திக்கி சிரமப்பட்டு ஓதுபவர்களுக்கு இரண்டு மடங்கு நற்கூலிகள் இருக்கின்றன’’.

## <u>ஸூரா அல் மாஊன்</u>

1. அல்குர்ஆனில் 107 வது அத்தியாயம் எது?
   - ஸூரா மாஊன்

2. அல் மாஊன் என்றால் என்ன?
   - அற்பப் பொருள்

3. 07 வசனங்களைக் கொண்ட ஸூரா மாஊன் எங்கு இறக்கியருளப்பட்டது?
   - மக்காவில்

4. ஸூரா மாஊன் போதிக்கின்ற விடயங்கள் 03 ஐக் குறிப்பிடுக?
   - அநாதைகளை விரட்டக் கூடாது
   - ஏழைகளுக்கு உணவளிப்பதும், உணவளிக்கத் தூண்டுவதும் நன்மையான காரியம்
   - தொழுகையில் பராமுகமாக இருப்பதும், பிறருக்கு காண்பிக்கத் தொழுவதும் ‘வைல்’ என்ற நரகைப் பெற்றுத் தரும்

5. அல்மாஊன் என்பதற்கு சில உதாரணங்கள் தருக?
   - சிறிய உதவிகள்
   - சிறுதொகைப் பணம்/ பொருட்கள்

6. அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் உதவுவதற்கான வழிமுறைகள் 03 ஐத் தருக?
   - பசித்தோருக்கு உணவளித்தல்
   - ஏழைகளுக்கு உடையளித்தல்
   - அநாதைகளுக்கு ஆதரவளித்தல்
   - அவர்களின் சொத்துக்களைப் பாதுகாத்தல்

7. எமது தொழுகைகளை உயிரோட்டமாக அமைத்துக் கொள்வதற்கான வழிகள் யாவை?
   - கலப்பற்ற தூய எண்ணத்துடன் தொழுதல்
   - முகஸ்துதி அற்றதாக தொழுகையை அமைத்துக் கொள்ளல்
   - இறையச்சத்துடன் தொழுதல்
   - தொடர்ச்சியாக கூலியை எதிர்பார்த்தவராகத் தொழுதல்

## ஹதீஸின் வகைகள்

1. இஸ்லாமிய அடிப்படை மூலாதாரங்கள் எத்தனை? அவை எவை?
   - 02
   - அல்குர்ஆன்
   - அல் ஹதீஸ்

2. வஹியின் 02 வகைகளையும் தருக?
   - வஹி மத்லுவ் - ஓதிக்காண்பிக்கப்பட்டது - அல்குர்ஆன்
   - வஹி ஙைரு மத்லுவ் - ஓதிக்காண்பிக்கப்படாதது - ஹதீஸ்

3. ஹதீஸின் பிரதான இரு பிரிவுகளும் எவை?
   - ஹதீஸுல் குத்ஸி
   - ஹதீஸுன் நபவி

4. ஹதீஸுல் குத்ஸிக்கு ஒரு உதாரணம் தருக?
   - ''அல்லாஹ் கூறுவதாக, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறுகிறார்கள்: எனது சாலிஹான அடியார்களுக்கு எந்தக் கண்ணும் கண்டிராத எந்தக் காதும் கேட்டிராத மனித கற்பனைகளுக்கும் எட்டாதவற்றை நான் தயார் செய்து வைத்துள்ளேன்''(புகாரி)

5. குர்ஆனுக்கும் ஹதீஸுல் குத்ஸிக்கும் இடையிலான வேறுபாடுகள் 03 தருக?
   - அல்குர்ஆன் அனைத்தும் முதவாதிர் எனும் தரம் வாய்ந்ததாகும்
   - ஹதீஸுல் குத்ஸி அவ்வாறானது அல்ல.அதில் பல வகையுண்டு
   - அல்குர்ஆன் முஃஜிஸாக்களில் ஒன்றாகும்
   - ஹதீஸுல் குத்ஸி அதில் அடங்குவதில்லை
   - அல்குர்ஆன் தொழுகையில் ஓதப்படக்கூடிய ஒன்று.அத்துடன் அதனை ஓதுவது இபாதத்
   - ஆனால் ஹதீஸுல் குத்ஸி அவ்வாறில்லை.

6. ஹதீஸுன் நபவியை அதன் அமைப்பு சார்ந்து எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை எவை?
   - 03 வகை
   - சொல் -கவ்லி
   - செயல் -பிஅலி
   - அங்கீகாரம் -தக்ரீரி சார்ந்தவை

## ஹதீஸின் பிரிவுகள்

1. ஹதீஸ்களைத் தொகுக்கும் பணி எக்கால கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது?
   - தாபிஈன்கள் காலத்தில்

2. ஹதீஸ்களைத் திரட்டும் பணிக்கு உத்தரவிட்ட ஆட்சியாளர் யார்?
   - கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹீமஹுல்லாஹ்)

3. ஹதீஸ் துறைக்குப் பங்காற்றிய ஸஹாபாக்கள் மூவரைக் குறிப்பிடுக?
   - அன்னை ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா)

- அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு)
- இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு)

4. தாபிஈன்களில் மூவரைக் குறிப்பிடுக?
   - இமாம் அப்துல்லாஹ் பின் முபாரக்
   - இமாம் இப்னு ஷிஹாப் அஸ்ஸுக்ரி
   - இமாம் ஸைத் இப்னு முஸய்யப்

5. ஒரு ஹதீஸில் காணப்படும் முக்கிய 02 விடயங்களும் எவை?
   - மதன்-உள்ளடக்கம்
   - இஸ்னாத்-அறிவிப்பாளர் தொடர்

6. இஸ்னாத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற 02 கலைகளும் எவை?
   - அஸ்மாஉர் ரிஜால்
   - இல்முல் ஜரஹ் வத்த.்.தில்

7. ஹதீஸ்களின் தரங்களுக்கேற்ப எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்? அவை எவை?
   - 03 வகை
   - ஸஹீஹ்
   - ஹஸன்
   - ழஈப்

8. குதுபுஸ் ஸித்தா/ ஸிஹாஹுஸ் ஸித்தா என்றால் என்ன?
   - ஆறு பரிசுத்த ஹதீஸ் கிரந்தங்கள்

9. அந்த ஆறு கிரந்தங்களும் எவை?
   - ஸஹீஹுல் புகாரி
   - ஸஹீஹுல் முஸ்லிம்
   - திர்மிதி
   - சுனன் அபூதாவூத்
   - இப்னு மாஜா
   - சுனன் நஸாஈ

10. ஸஹீஹைன் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
    - ஸஹீஹுல் புகாரி
    - ஸஹீஹுல் முஸ்லிம்

11. ‘‘சுனன் அர்பஆ’’ என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
    - திர்மிதி
    - இப்னு மாஜா
    - அபூ தாவூத்
    - நஸாஈ

## <u>மவ்ழூஆத்களின் தோற்றமும் விளைவுகளும்</u>

1. ‘‘மவ்ழூஆத்’’ என்றால் என்ன?
   - இட்டுக்கட்டப்பட்டவை/ புனைந்துரைக்கப்பட்டவை

2. மவ்ழூஆத் எவ்வாறு தோற்றம் பெற்றது?
    - குழுக்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகள்
    - சுயநலப் போக்குகள்
    - தத்தமது இலக்குகளை அடைய குறுகிய சிந்தனைப் போக்கு

3. மவ்ழூஆத் ஒன்றைக் குறிப்பிடுக?
    - ''யார் கத்தரிக்காய் சாப்பிடுகிறாரோ அவர் சுவனம் நுழைவார்''

4. மவ்ழூஆத் உருவாகியமைக்கான 03 காரணிகளைக் குறிப்பிடுக?
    - அல்லாஹ்வின் அன்பைப் பெறுதல்
    - அரசியல், சிந்தனைப் பிரிவுகளுக்கு வலுச்சேர்த்தல்
    - அங்காடி வியாபாரிகள்
    - பிரபலம் தேடுவோர்

5. மவ்ழூஆத்தில் ஈடுபட்ட இரு குழுவினரைப் பெயரிடுக?
    - ஷீயாக்கள்
    - கவாரிஜ்கள்

6. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது இட்டுக்கட்டுவது அல்லது பொய்யுரைப்போருக்கான தண்டனை யாது?
    - ''யார் வேண்டுமென்று என் மீது பொய்யுரைக்கிறாரோ அவர் நரகத்தில் தனக்கான ஒதுங்குமிடத்தை ஆக்கிக் கொள்ளட்டும்''

7. ஹதீஸ்களை புனைந்துரைப்பதில் ஆரம்ப கர்த்தாவாகக் காணப்பட்டவன் யார்?
    - அப்துல்லாஹ் இப்னு ஸப.ஃ.

## நுபுவ்வத்தும் மி.ஃ.ராஜும்

1. நுபுவ்வத் என்றால் என்ன?
    - நபித்துவம்

2. மி.ஃ.ராஜ் என்றால் என்ன?
    - விண்ணுலகப் பயணம்

3. நுபுவ்வத் கிடைக்கும் போது நபியவர்களின் வயது எத்தனை?
    - 40

4. முதல் வஹி எங்கு அருளப்பட்டது?
    - ஹிராக் குகை

5. ''இக்ர.ஃ.'' என்பதன் பொருள் யாது?
    - ஓதுவீராக!

6. முதலாவது இறக்கியருளப்பட்ட அத்தியாயத்தின் பெயர் என்ன?
    - ஸூரா அலக்

7. கதீஜா அம்மையார் நபியவர்களை யாரிடம் அழைத்துச் சென்றார்?

- வரகத் இப்னு நவ்பல்

8. ‘‘நாமூஸுல் அ.ஃலம்’’ என்பது யாரைக் குறிக்கின்றது?
    - ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்)

9. அடிமைகளில் முதலாவது இஸ்லாத்தை ஏற்றவர் யார்?
    - ஸைத் பின் ஹாரிதா (ரழியல்லாஹு அன்ஹு)

10. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பிரச்சாரம் எங்கு நடந்தது? எவ்வளவு காலம்?
    - தாருல் அர்கம்
    - 03 வருடங்கள்

11. பரகசியப் பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்ட மலைக்குன்று எது?
    - ஸபா மலைக் குன்று

1. முதலில் இஸ்லாத்தை ஏற்ற பெண் யார்?
    - கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா)

2. அல் இஸ்ரா எனப்படுவது யாது?
    - இராப் பயணம்

3. ஸித்ரதுல் முன்தஹா எங்குள்ளது?
    - 7 வானங்களுக்கு அப்பாலுள்ளது

4. புராக் எனப்படுவது யாது?
    - வாகனம்

5. மஸ்ஜிதுல் அக்ஸா எங்குள்ளது?
    - ஜெரூஸலம்

6. அபூபக்கர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு ஸித்தீக் என்ற பெயர் எப்போது கிடைத்தது?
    - மி.ஃராஜ் பயணத்தில் நபியவர்களுக்கு சுவன இன்பங்களும் நரக வேதனைகளும் காண்பிக்கப்பட்டன.ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அவற்றை விளக்கினார்கள்.மறுநாள் காலை இந்த நிகழ்வை அபூபக்கர் (ரழியல்லாஹு அன்ஹு) கேள்வியுற்ற போது எந்த தயக்கமுமின்றி உடனடியாக ஏற்றுக் கொண்டார்கள்.இதனால்தான் அவர்கள் ஸித்தீக் என்று சிறப்புப் பெயர் பெற்றார்.

7. 50 நேரத் தொழுகை 05 நேரமாகக் குறைக்கப்படக் காரணமாக இருந்தவர் யார்?
    - மூஸா (அலைஹிஸ்ஸலாம்)

8. முதல் வஹி இறங்கிய போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நபி என்பதை உறுதிப்படுத்திய அறிஞர் யார?
    - வரகத் இப்னு நௌபல்

9. அல் இஸ்ராவில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பெற்ற அனுபவத்தைக் குறிப்பிடுக.

- நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை ‘புராக்’ எனும் வாகனத்தில் ஏற்றி மக்காவிலுள்ள மஸ்ஜிதுல் ஹரமிலிருந்து ஜெரூஸலத்திலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அழைத்துச் செல்கிறார்கள்.நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அங்கு முன்னைய நபிமார்களுக்கு இமாமாக நின்று தொழுகை நடத்துகிறார்கள்.அங்கிருந்தே மி.ஃ.ராஜ் பயணத்தை ஆரம்பிக்கிறார்கள்.

10. அல் இஸ்ராவுக்கும் அல் மி.ஃ.ராஜுக்கும் இடையிலுள்ள வேறுபாடு யாது?
    - அல் இஸ்ரா:- மண்ணுலகப் பயணம்
    - அல் மி.ஃ.ராஜ்:- விண்ணுலகப் பயணம்

## <u>நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் த.ஃ.வாவும் சவால்களும்</u>

1. முதல் வஹியின் அதிர்ச்சியில் இருந்த நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு அல்லாஹ் எவ்வாறு த.ஃ.வாக் கட்டளையை பிறப்பித்தான்?
    - “போர்த்திக் கொண்டிருக்கும் நபியே!நீங்கள் எழுந்து (மனிதர்களுக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்யுங்கள்”(74:1-2)

2. த.ஃ.வா என்பதன் கருத்து யாது?
    - அழைப்புப் பணி

3. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தூதை குறைஷியர் எதிர்க்கக் காரணம் யாது?
    - நபியவர்கள் எடுத்துச் சொன்ன தூதும் ஏகத்துவச் செய்தியும் குறைஷிகளுக்கு ஆச்சரியமாகவும் கசப்பாகவும் தெரிந்தது.
    - அதனை தமது வழிபாட்டு முறைக்கு நேரெதிரானதாகவும் கருதினர்
    - தமது செல்வாக்கை இழக்கச் செய்வதாகவும் கருதினர்

4. பகிரங்க பிரச்சாரத்தில் ஈடுபட்ட போது நபியவர்களை எதிர்த்த தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?
    - அபூலஹப்
    - அபூஜஹ்ல்

5. முஸ்லிம்கள் ஹிஜ்ரத் சென்ற இடங்கள் எவை?
    - ஹபஷா
    - மதீனா
    - தாயிப்

6. பகிரங்க பிரச்சாரத்தைத் தடுப்பதற்காக குறைஷியர் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்?
    - சூனியக்காரர் பைத்தியக்காரர் கவிஞர் என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை எதிரிகள் சாடினர்.
    - எதிரிகள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நடக்கும் பாதையில் முட்களைப் பரப்பினர்
    - கழுத்தை சீலையால் திருகினர்
    - அழுகிய ஒட்டகக் குடலை மாலையாக இட்டனர்
    - அன்னாரையும் அவர்களைப் பின்பற்றியோரையும் அடித்துக் காயப்படுத்தினர்

7. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் அவர்களுடைய குடும்பத்தாரும் தடுத்து வைக்கப்பட்டிருந்த பள்ளத்தாக்கின் பெயர் யாது?
    - ஷி:.பு அபூதாலிப்
8. அதில் எத்தனை ஆண்டுகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்?
    - 03 ஆண்டுகள்

9. ஆமுல் ஹுஸ்ன் என்றால் என்ன? அது ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றது?
    - துக்க ஆண்டு
    - நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு பக்கபலமாக இருந்த அபூதாலிப் அவர்களும் கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களும் மரணமடைந்த ஆண்டாகும்.

10. ''பைஅதுல் அகபா'' என்றால் என்ன?
    - நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கும் மதீனாவாசிகளுக்கும் இடையே சில நிபந்தனைகளுடன் கைச்சாதிடப்பட்ட உடன்படிக்கையாகும்.

11. ''மதீனதுன் நபி'' என அழைக்கப்படும் நகரம் எது?
    - மதீனா
12. அது அவ்வாறு அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?
    - நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் யத்ரிப் (மதீனா) பிரவேசத்தோடு அந்நகர் ''மதீனதுன் நபி'' (நபியின் நகர்) என அழைக்கப்பட்டது.

13. முஸ்லிம்களுக்கும் முஷ்ரிக்குகளுக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தங்கள் 03 தருக?
    - பத்ர்
    - உஹத்
    - அஹ்ஸாப்(ஹந்தக்/அகழிப் போர்)

14. ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு ஹுதைபியா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது?
    - ஹிஜ்ரி 06

## உம்மஹாத்துல் மு:.மினீன்

1. ''உம்மஹாத்துல் மு:.மினீன்'' என்பதன் கருத்து யாது?
    - மு:.மின்களின் அன்னையர்

2. ''உம்மஹாத்துல் மு:.மினீன்'' என்போர் யார்?
    - நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மனைவியர்கள்

3. ''உம்மஹாத்துல் மு:.மினீன்''கள் நாலவரின் பெயரைத் தருக?
    - கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா)
    - ஸவ்தா (ரழியல்லாஹு அன்ஹா)
    - ஸபிய்யா (ரழியல்லாஹு அன்ஹா)
    - ஜுவைரிய்யா (ரழியல்லாஹு அன்ஹா)

4. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் முதல் மனைவியின் பெயர் என்ன?

- அன்னை கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா)

5. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் இரண்டாவது மனைவியாக அமைந்தவர் யார்? அவரது முதல் கணவரின் பெயர் என்ன?
    - அன்னை ஸவ்தா (ரழியல்லாஹு அன்ஹா)
    - ஸக்ரான் பின் அம்ர் (ரழியல்லாஹு அன்ஹு)

6. ஸபிய்யா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் எக்கோத்திரத்தைச் சேநர்ந்தவர்கள்? அவருடைய தந்தையின் பெயர் என்ன?
    - யூதர்களின் பனூ குறைழா கோத்திரம்
    - ஹுயை

7. ஸபிய்யா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் முதற்கணவரின் பெயர் என்ன? அவர் எப்போரில் தனது கணவனை இழந்தார்?
    - கனானா பின் அபீ
    - கைபர் போர்

8. நபியவர்களை மணமுடிக்கும் போது ஸபிய்யா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் வயது எத்தனை?
    - 17 வயது

9. அன்னை ஸபிய்யா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு ஏற்பட்ட கவலையை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எவ்வாறு தேற்றினார்கள்?
    - ‘‘ஹாரூன்(அலைஹிஸ்ஸலாம்) எனது தந்தை என்றும் தந்தையின் சகோதரன் மூஸா(அலைஹிஸ்ஸலாம்) எனவும் எனது கணவன் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) எனவும் இவர்கள் அனைவரும் நபிமார்கள் எனவும் நீங்கள் பதிலளித்திருக்கக் கூடாதா? எனக் கூறி ஸபிய்யா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களைத் தேற்றினார்கள்.

10. பனூ முஸ்தலக் கோத்திரத் தலைவரது மகளின் பெயர் என்ன?
    - ஜுவைரிய்யா (ரழியல்லாஹு அன்ஹா)

11. பனூ முஸ்தலக் கோத்திரத்துடனான போரில் அன்னை ஜுவைரிய்யா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை கைது செய்த ஸஹாபி யார்?
    - ஸாபித் பின் கைஸ் (ரழியல்லாஹு அன்ஹு)

12. ஜுவைரிய்யா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் பண்புகள் சிலவற்றைக் குறிப்பிடுக?
    - நுணுக்கமான அறிவு
    - நேர்மை
    - இனிமையான சொல்லாடல்
    - மொழித் தேர்ச்சி

## ஸஹாபாக்கள்

1. ஸஹாபாக்கள் எனப்படுவோர் யார்?
    - நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நேரடியாக கண்டு அவர்களை ஏற்றுப் பின்பற்றியோர்.

2. ஸஹாபாக்கள் நால்வரின் பெயர்களைக் குறிப்பிடுக?
    - அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு)
    - அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு)
    - அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு)
    - அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் (ரழியல்லாஹு அன்ஹு)

3. அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் காணப்பட்ட சிறந்த பண்புகள் எவை?
    - எளிமை
    - கடும் உழைப்பு
    - அமானிதம் பேணல்

4. இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் சிறப்புக்கள் 04 ஐக் குறிப்பிடுக.
    - ஹதீஸ்களை அதிகமாக ரிவாயத் செய்த ஆண்களில் இரண்டாமவர்
    - தயாள குணமுடையவர்
    - தன்னடக்கம் கொண்டவர்
    - விருந்தோம்பலில் விருப்பம் கொண்டவர்
    - கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் அதிக ஆர்வமுடையவர்

5. இப்னு ஸுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் துணிகரச் செயல்கள் 02 ஐக் குறிப்பிடுக?
    - அஹ்ஸாப் போரில் கலந்து கொண்டமை
    - சிறுவயது முதல் துணிச்சல் மிக்கவராகக் காணப்பட்டமை

6. இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் பணிகள் 03 ஐக் குறிப்பிடுக?
    - நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு பணிவிடை செய்தமை
    - அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் காலத்தில் கலீபாவின் ஆலோசகராகப் பணியாற்றியமை
    - ஹதீஸ்களை ரிவாயத் செய்தமை

7. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ……………அவர்களை ஓர் இடையனாகக் கண்டார்கள்.?
    - இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு)

8. இப்னு ஸுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் தந்தை ……………ஆவார்.
    - ஸுபைர் இப்னுல் அவ்வாம் (ரழியல்லாஹு அன்ஹு)

9. இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் தாயார்…………..ஆவார்.
    - ஸைனப் பின்த் மழ்ஊன் (ரழியல்லாஹு அன்ஹா)

10. இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ……………….. துறையில் புகழ் பெற்றார்.
    - தப்ஸீர்

11. இப்னு ஸுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் …………விரும்பினார்கள்.
    - ஹிஜாஸின் ஆட்சியை

12. ஹிஸ்ரத்துக்குப் பின்னர் முஹாஜிரீன்களுக்குக் கிடைத்த முதல் குழந்தை............ஆவார்?
    - இப்னு ஸுபைர் (ரழியல்லாஹு அன்ஹு)

13. இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் பெற்ற பட்டங்களைக் குறிப்பிடுக?
    - பஹ்ருல் உலூம்
    - ஸய்யிதுல் முபஸ்ஸரீன்

## இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்)

1. இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் சிறப்புப் பெயரைக் குறிப்பிடுக?
    - ➢ கலீலுல்லாஹ் (அல்லாஹ்வின் நண்பன்)

2. ''அபுல் அன்பியா'' என்பதன் கருத்து யாது? இவ்வாறு அழைக்கப்பட்டவர் யார்?
    - ➢ நபிமார்களின் தந்தை
    - ➢ இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்)
3. அவர் எந்த நாட்டில், எந்த ஊரில் பிறந்தார்?
    - ➢ ஈராக் நாட்டிலுள்ள உர் எனும் ஊரில் பிறந்தார்.

4. இவரது தந்தையின் பெயரையும் தொழிலையும் குறிப்பிடுக?
    - ➢ ஆஸர்
    - ➢ சிலை வடிப்பவர்

5. அவரது காலத்தில் இடம்பெற்ற வழிபாட்டு முறை யாது?
    - ➢ சிலை வணக்கம்

6. அவர் வாழ்ந்த 03 நாடுகளைக் குறிப்பிடுக?
    - ➢ ஈராக்
    - ➢ எகிப்து
    - ➢ மக்கா

7. அவரது மனைவி, மக்களின் பெயர்களைக் குறிப்பிடுக?
    - ➢ மனைவி :-ஹாஜரா (அலைஹிஸ்ஸலாம்)
      மகன் :-இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்)

      சாரா (அலைஹிஸ்ஸலாம்)
      இஸ்ஹாக் (அலைஹிஸ்ஸலாம்)

8. மகாமு இப்ராஹீம் அப்பெயர் கொண்டு அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
    - ➢ இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) கஃபதுல்லாஹ்வைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டார்கள்.கஃபாவின் சுவர்கள் மேலெழுந்த போது ஒரு கல்லில் ஏறி நின்று அதனைப் பூரணப்படுத்தினார்கள்.அந்தக் கல்லில் இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்)யின் இரு பாதச் சுவடுகளும் பதிந்திருந்தன.அது மகாமு இப்ராஹீம் எனப்பட்டது.

9. ''ஸபீஹுல்லாஹ்'' என அழைக்கப்பட்டவர் யார்?
    - ➢ இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்)

10. இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களிடம் காணப்பட்ட உயர் பண்புகளைக் குறிப்பிடுக?
    - அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுதல்
    - தியாகம்
    - விருந்தோம்பல் பழக்கம்
    - நேர்மை
    - புத்தி கூர்மை
    - நுண்ணறிவு

11. இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய குடும்பத்துடன் தொடர்புடைய ஹஜ் செயற்பாடுகளைக் குறிப்பிடுக?
    - ஸபா-மர்வாக்கிடையில் தொங்கோட்டம் ஓடல்
    - மகாமு இப்ராஹிமுக்கு முன்னால் 02 ரக்அத் தொழுதல்
    - ஸம்ஸம் நீர் அருந்துதல்

## <u>அஜ்னபி - மஹ்ரமி வரையறைகள்</u>

1. ''மஹ்ரமி'' என்பதன் கருத்து யாது?
    - திருமண உறவுகள் வைத்துக் கொள்ளத் தடை செய்யப்பட்டவர்கள்

2. ''அஜ்னபி'' என்பதன் கருத்து யாது?
    - திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்

3. மஹ்ரம் எத்தனை வகைப்படும்? அவை எவை?
    - 03 வகைப்படும்
    - குடும்ப உறவு மூலம்
    - திருமண உறவு மூலம்
    - பால்குடி உறவு மூலம்

4. அஜ்னபி என்பது திருமணம் செய்யத் தடைசெய்யப்பட்டோரைக் குறிக்கும் (பிழை)

5. தாயின் சகோதரியைத் திருமணம் செய்வது இஸ்லாத்தில் நிரந்தரமாகத் தடை செய்யப்பட்டுள்ளது.(சரி)

6. ஒரு ஆண் தனது மனைவியுடன் அவளது சகோதரியையும் திருமணம் செய்து கொள்வது பிழையாகாது. (பிழை)

7. குடும்ப உறவுமுறை மூலம் தடையாவோர் பால்குடி உறவு மூலமும் தடையாவார் (பிழை)

8. ஒரு பெண் தனது சகோதரியின் கணவனுடன் தனியாகப் பயணிப்பதில் தவறில்லை (பிழை)

## சமூகப்பணி செய்வோம்

1. ‘‘ஹில்புல் புழூல்’’ என்பதன் கருத்து யாது?
   - சமூகநல அமைப்பு/சமூகப் பணி

2. ‘‘இமாரத்’’ என்பதன் கருத்து யாது?
   - பூமியை வளப்படுத்தல்

3. சமூக சேவைகளுக்கு உதாரணம் 05 ஐக் குறிப்பிடுக?
   - பசித்தவர்களுக்க உணவளித்தல்
   - நீர் வசதி செய்து கொடுத்தல்
   - நோய்வாய்ப்பட்டோருக்கு உதவுதல்
   - அநியாயம் இழைக்கப்பட்டோருக்கு உதவுதல்
   - ஏழைகள் விதவைகள் அநாதைகளுக்கு நேசக்கரம் நீட்டுதல்

4. பொதுப்பணி தொடர்பான ஒரு அல்குர்ஆன் வசனத்தையும் ஒரு ஹதீஸையும் தருக?
   - ‘‘.......நீங்கள் நன்மையான விடயங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்’’(05:02)
   - ‘‘உங்களில் எவருக்குத் தனத சகோதரனுக்குப் பயனளிக்க முடியுமாக உள்ளதோ அவர் அதைச் செய்யட்டும்’’(முஸ்லிம்)

5. சமுதாயப் பணிகளுக்கு உதாரணம் 05 ஐக் குறிப்பிடுக?
   - பள்ளிவாசல் கட்டுதல்
   - பாடசாலைகளை அமைத்தல்
   - நூலகங்களை நிறுவுதல்
   - சனசமூக நிலையங்களை உருவாக்குதல்
   - மருத்துவமனைகளைக் கட்டுதல்
6. பொதுப்பணிகள் செய்வதால் கிடைக்கும் ஈருலகப் பயன்கள் இவ்விரண்டு குறிப்பிடுக?
   - <u>மறுமைப் பயன்கள்</u>
     - _சுவனம் கிடைக்கும்
     - அதிக நன்மை கிடைக்கும்
     - அல்லாஹ்வின் விருப்பத்திற்குரியவராவார்
   - <u>உலகப் பயன்கள்</u>
     - சமூக ஒற்றுமை ஏற்படும்
     - சமூகப் பிரச்சினைகள கஷ்டங்கள் நீங்கும்
     - தேவையுடையோர்களின் தேவைகள் நிறைவேறும்

## பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்போம்

1. பொதுச் சொத்து என்றால் என்ன?
   தனிமனிதர்களால் அல்லது குழுக்களால் வக்பு (தர்மம்) செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான சொத்துக்கள் எல்லாம் பொதுச் சொத்துக்கள் எனப்படும்.

2. பொதுச் சொத்துக்கள் பற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிய ஹதீஸ் ஒன்றைக் குறிப்பிடுக?
   - ‘‘நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள்.உங்கள் பொறுப்பு பற்றி நிச்சயம் நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்’’(முஸ்லிம்)

3. பொதுச் சொத்துக்கள் சிலவற்றைக் குறிப்பிடு?
   - பாடசாலைகள்
   - பள்ளிவாவல்கள்
   - மருத்துவமனைகள்
   - நூலகங்கள்
   - பூங்காக்கள்
   - மையவாடிகள்
   - ஆறு, குளங்கள்
   - பாதைகள்

4. பொதுச் சொத்துக்களை நாசம் செய்வதால் ஏற்படும் விளைவுகள் 03 ஐக் குறிப்பிடுக?
   - மக்கள் அதனைப் பயன்படுத்துவதில் சிரமம் ஏற்படும்
   - தீமை கிடைக்கும்
   - மக்களின் சாபத்திற்குள்ளாவார்